FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318788

1. District : மாவட்டம் ராமநாதபுரம் PS: காவல்நிலையம் திருஉத்தரகோசமங்கை Year: ஆண்டு FIR No.: 831/25 முத.அ. எண் Date: 05.12.25 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: பிடபம்பரி 74(a),
(ii) Act சட்டம்: உரிமம் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 Sections பிரிவுகள்: 12 & 8 of PC(Amend) Act 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 08-4-2022 முதல்
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05-12-2025 Time : நேரம் 14.00 மணி 01.06-2023 இரவு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் முதல் நிலை விசாரணை அந்த

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சிவகார் 64 கிமி தென் கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி பரமக்குடி தெற்கு காவல் நிலையம், பரமக்குடி, ராமநாதபுரம் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந. இராஜேஸ்வரி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோதண்டன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 02/02/76 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் சீர்வரிசை அலுவலர் (g) Address : முகவரி காவல் நிலைய தலைமை காவலர் அருகில் இலுப்பைக்குடி, ராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

- தானம் 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது. -

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் ஏதுமில்லை -

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

குற்றம் சாட்டப்பட்டவர்கள்:-

1) திரு.அங்குசெல்வன், கண்காணிப்பாளர், இணை இயக்குநர், மண்டல கல்லூரிக்கல்வி, மதுரை, தற்போது உதவி இயக்குநர், கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்.
2) திரு.சத்தியநாதன், தேர்வு நிலை உதவியாளர், பசும்பொன் திரு.முத்துராமலிங்கம் நினைவுக் கல்லூரி, , கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
3) திரு.இருளாண்டி, உதவி பேராசிரியர், தாவரவியல் துறை, பசும்பொன் திரு.முத்துராமலிங்கம் நினைவுக் கல்லூரி, கோட்டைமேடு, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
4) திருமதி.மணிமேகலை, உதவி பேராசிரியர், தமிழ் துறை, பசும்பொன் திரு.முத்துராமலிங்கம் நினைவுக் கல்லூரி, கோட்டைமேடு, கமுதி, இராமநாதபுரம்.
5) திரு.மணிகண்டன், தற்காலிக உதவி பேராசிரியர், வணிகவியல் துறை, பசும்பொன் திரு.முத்துராமலிங்கம் நினைவுக் கல்லூரி, கோட்டைமேடு, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
ந. இராஜசேகரன்,

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05-12-2025-14-35 மணி.

Name: பெயர் தலைமை காவலர்,
Rank: நிலை ..... No. எண் .....
முதுகுளத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 23/2025 சட்டப்பிரிவு 7(a), 12 &8 of Prevention of Corruption Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி

சமர்ப்பிக்கப்படுகிறது

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரக விழிப்பு அறிக்கை அடிப்படையில் குற்ற அலுவலர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக முதற்கட்ட விசாரணை தொடர்ச்சியாக இயக்குநர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஆணைப்படி காலம் 7 ல் கண்ட எதிரிகள் மீது குற்ற எண்: /2025 ஊழல் தடுப்பு திருத்த சட்டம் - 2018 பிரிவுகள் 7 (a), 12 & 8 ன் படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

1 வது எதிரி திரு.அங்குசெல்வன் என்பவர் கடந்த 04.06.2013 முதல் 14.03.2017 வரை முன்னாள் கண்காணிப்பாளராக இணை இயக்குநர், மண்டல கல்லூரிக்கல்வி அலுவலகம் மதுரையில் பணிபுரிந்து தற்போது உதவி இயக்குநர்,கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் திருநெல்வேலியில் பணியாற்றி வருகிறார். 2 வது எதிரி திரு.சத்தியநாதன் என்பவர் கடந்த 04.06.2013 முதல் 28.02.2025 வரை தேர்வு நிலை உதவியாளராக பசும்பொன் திரு.முத்துராமலிங்கம் நினைவுக்கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார். 3 வது எதிரி திரு.இருளாண்டி என்பவர் கடந்த 05.06.2023 முதல் தற்போது வரை உதவி பேராசிரியராக தாவரவியல் துறையிலும், 4வது எதிரி திருமதி.மணிமேகலை என்பவர் கடந்த 05.06.2023 முதல் தற்போது வரை உதவி பேராசிரியராக, தமிழ் துறையிலும், 5 வது எதிரி திரு.மணிகண்டன் என்பவர் கடந்த 06.08.2012 முதற் தற்போது வரை தற்காலிக உதவி பேராசிரியராக, வணிகவியல் துறையிலும் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி கோட்டை மேடு பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவுக் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார்கள். குற்ற அலுவலர்கள் 1 முதல் 4 வரையிலானவர்கள் ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018 சட்டப்பிரிவு 2 (c)ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள். குற்ற அலுவலர் 5 தனி நபர் ஆவார்.

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுகா, கோட்டை மேட்டில் உள்ள பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவுக் கல்லூரியானது ஒரு அரசு உதவி பெறும் கல்லூரி ஆகும்.

அரசு உதவி பெறும் இக்கல்லூரிக்கு மாணவர் சேர்க்கையின் படியும், ஆசிரியர் பணிப்பளுவின் படி இக்கல்லூரிக்கு 1999-2000 ஆம் ஆண்டு துறை வாரியாக பேராசிரியர்கள் பணியிடமானது சென்னை, கல்லூரி கல்வி ஆணையரின் செயல்முறைகள் ப.மு.எண் 45397/க்யூ 1/99 நாள்.28.10.1999 இன் படி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் 2022-2023 ஆம் கல்வியாண்டில் காலியாக இருந்த தமிழ்துறை -01, பொருளியல் துறை -01, அரசியல் அறிவியல் துறை- 01, வேதியில் துறை- 01, வணிகவியல் துறை- 03, விலங்கியல் துறை- 01, தாவரவியல் துறை- 02, என 10 உதவி பேராசிரியர்கள் மற்றும் நூலகர் -01 ஆகிய 11 காலி பணியிடங்களை நிரப்பிட அனுமதி வேண்டி பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவுக்கல்லூரி பொறுப்பு முதல்வர் வே.அருணாச்சலம் என்பவர் சென்னை கல்லூரி கல்வி இயக்குநருக்கு எண்.263/2021-2022 நாள்: 02.03.2022 மூலம் மதுரை மண்டல கல்வி இணை இயக்குநரிடம் வேண்டியுள்ளார்.

அதன் பின் பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவுக்கல்லூரி பொறுப்பு முதல்வர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மதுரை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநரால் ந.க.எண் :6847/இ4/2017 நாள்: 08.03.2023 கடிதத்தின் வாயிலாக சென்னை கல்லூரி கல்வி இயக்குநரிடம் ஆணை வேண்டி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பின் சென்னை கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) செயல்முறைகள் ந.க.எண்: 35227/ஜி3/2022 நாள்: 06.08.2022 ன் படி பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவுக்கல்லூரியில் உள்ள காலியாக உள்ள பணியிடங்களான தமிழ்துறை -01, பொருளியல் துறை -01, அரசியல் அறிவியல் துறை- 01, வேதியில் துறை- 01, வணிகவியல் துறை- 03, விலங்கியல் துறை- 01, தாவரவியல் துறை- 02, என 10 உதவி பேராசிரியர்கள் மற்றும் நூலகர் -01 ஆகிய 11 காலி பணியிடங்களை நிரப்பிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணை அறிக்கையில் இருந்து எதிரி-5 மணிகண்டன் என்பவர் கமுதி, பசும்பொன் திரு.முத்துராமலிங்கத்தேவர் நினைவுக்கல்லூரியில் உள்ள காலி பணியிடமான வணிகவியல் துறையில் உதவி பேராசிரியர் நிரந்தர பணி நியமன ஆணைக்காக எதிரிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்களிடம் முதல் முறையாக கடந்த 28.04.2022 ஆம் தேதி மதுரை மாட்டுத்தாவணி தனியார் பயணிகள் பேருந்து நிலையத்தில் வைத்து 2 வது எதிரி சத்தியநாதன் சொன்னதன் பேரில் மதுரை கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலக வாசலில் வைத்து

ரூ.3,50,000/- ஐ எதிரி-1 ஆன அங்குச்செல்வத்திடம் கொடுத்ததாகவும் அதனை தொடர்ந்து கடந்த 02.05.2022 ஆம் தேதி எதிரி-2 சத்தியநாதன் சொன்னதின் பேரில் மதுரை கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலக வாசலில் வைத்து ரூ.6,50,000/- ஐ எதிரி-1 திரு.அங்குச்செல்வத்திடம் கொடுத்ததாகவும் பின் 29.05.2023 ஆம் தேதி எதிரி-4 திருமதி.மணிமேகலை மற்றும் எதிரி-2 சத்தியநாதன் முன்னிலையில் பணம் ரூ.20,00,000/- மதுரை மாட்டுத்தாவணி அருகே உள்ள பயணியர் பேருந்து நிலையத்தில் வைத்து கொடுத்ததாகவும், மேலும் கடந்த 01.06.2023 ஆம் தேதி எதிரி-4 மணிமேகலையிடம் ரூ.3,00,000/- மதுரை மாட்டுத்தாவணி அருகே உள்ள பயணியர் பேருந்து நிலையத்தில் வைத்து பணம் கொடுத்ததாகவும், ஆக மொத்தம் ரூ.33,00,000/- கொடுத்ததாகவும் , பின் பணி நியமன ஆணை மேற்படி எதிரிகள் பெற்றுத்தராததால், மேற்படி பணத்தை எதிரிகளிடம் இருந்து திரும்ப பெற்றள்ளதாகவும் தெரியவருகிறது. பணி நியமனம் தொடர்பாக எதிரி-5 பிற எதிரிகளான 2,3 மற்றம் 4 ஆகியோர்களுடன் ஒருவொருக்கொருவர் அலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளது CDR (Call details Record) மூலம் தெரியவருகிறது.

மேலும் முதற்கட்ட விசாரணையில் எதிரி-5 திரு.மணிகண்டன் காது சரிவர கேளாதோர் என்பதால் அவரது மனைவி திருமதி.மணிமேகலை என்பவர் தான் பல தேதிகளில் அலைபேசியில் எதிரி-2 திரு.சத்தியநாதன், எதிரி-3 திரு.இருளாண்டி மற்றும் எதிரி-4 R.மணிமேகலை ஆகியோர்களிடம் பணிநியமனம் சம்பந்தமாக லஞ்சப்பணம் கொடுத்தது மற்றும் திரும்ப பெற்றது சம்பந்தமாக பேசியுள்ளது உரையாடல் பதிவுகளில் இருந்து தெரியவருகிறது.

மேலும் மேற்படி 1 வது எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய 17 (A) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018ன் படி உயர் கல்வித்துறை அரசு கடிதம் (2D) எண்.473/G2/2025-2 நாள்.17.03.2025 ன் பிரகாரம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி 3 வது மற்றும் 4 வது எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய 17 (A) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018ன் படி கல்லூரி கல்வி இணை இயக்குநரகம் அரசு கடிதம் (2D) எண்.3235/D3/2024 நாள்.14.10.2025 ன் பிரகாரம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கண்ட குற்றம் சம்பந்தமாக எதிரி-1 திரு.அங்குசெல்வம், கண்காணிப்பாளர், இணை இயக்குநர். மண்டல கல்லூரிக்கல்வி, மதுரை, தற்போது உதவி இயக்கநர், கல்லூரிக்கல்வி இணை இயக்கநர் அலுவலகம், திருநெல்வேலி, எதிரி-2

திரு.சத்தியநாதன், தேர்வு நிலை உதவியாளர், பசும்பொன் திரு.முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம், எதிரி-4 க/பெ இராமமூர்த்தி,உதவி பேராசிரியர், தமிழ் துறை, பசும்பொன் திரு.முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம், மற்றும் எதிரி-5 திரு.மணிகண்டன், தற்காலிக உதவி பேராசிரியர், வணிகவியல் துறை, பசும்பொன் திரு.முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் ஆகியோர்கள் மீது ஊழல் தடுப்பு திருத்த சட்டம்-2018 பிரிவுகள் 7 (a), 12 & 8 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசலை மாண்புமிகு இராமநாதபுரம் மாவட்ட முதன்மை நீதிபதி, இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

(ரு.ராஜேஸ்வரி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
இராமநாதபுரம்.
05.12.2025